

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்திட உதவி மையத்தை தொடங்கி வைத்து மேற்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்தான கையேடுகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாணவர்களுக்கு வழங்கினார். உடன் தொகுதி பொறுப்பாளர் எ.வ.குமரன், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், காலேஜ் கு.ரவி, கு.கணேஷ் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உடன் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்திட உதவி மையம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, மே 5-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மேல்நிலைக் கல்வி முடித்த மாணவர்களுக்கு கல்லூரிகளில் சேர்ந்திட உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு இணைதள சேவையை தொடங்கி வைத்தார்.

சென்னை, அண்ணா அறிவாலயலத்தில் மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்லூரிகளில் முதலாமாண்டு சேர்ந்திடும் உதவி மையம் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சிப் பெற்ற மாணவ, மாணவியர்கள் பொறியியல் கல்லூரியில் சேர்ந்திட, அண்ணா பல்கலைக் கழகத்தில் மாணவர் சேர்க்கை மாணவர் சேர்க்கை இணையதளத்தில் விண்ணப்ப பதிவு மற்றும் கலை, அறிவியல் கல்லூரிகள், பொறியியல் பட்டையப் படிப்புகள், பார்மசி கல்லூரிகளில் சேர்ந்திட உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

03.05.2026 ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் சாலை, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்திட உதவி மையம் தொடங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் எ.வ.குமரன் தலைமை வகித்தார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், மாணவர் அணி அமைப்பாளர் காலேஜ் கு.ரவி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கு.கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்திட இணையதள சேவையை தொடங்கி வைத்து, மாணவர்களிடையே உரையாற்றினார்.

பின்னர், உயர்க் கல்வி வேலைவாய்ப்பு வழிக்காட்டி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, 12வகுப்பிற்கு பிறகான மேற்படிப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த கையேடுகளை பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாணவர்களுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநில தொ.மு.ச., செயலாளர் க.சௌந்தரராசன், அமைப்புசாரா பிரச்சார செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர் டி.வி.எம். நேரு, சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, இரா.கார்த்திகேயன், பகுதி செயலாளர்கள் பா.ஷெரீப், அ.கோவிந்தன், வழக்கறிஞர் அ.அருள்குமரன், இரா.சீனுவாசன், எம்.ஆர். கலைமணி, துரை.வெங்கட், நகர துணை அமைப்பாளர்கள் சச்சின் சபரி, சாம்.ரகுநாத், கல்லூரி மாணவர் தலைவர் பரணி, இரா.சரவணன், பா.தீபன் உட்பட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்த

# பிளஸ் 1, பிளஸ் 2 புதிய பாடத்திட்டங்கள்!

## மே 11 முதல் சென்னையில் சிறப்புப் பணிமனை!

நாகர்கோவில், மே 5-

தமிழகத்தில் வரும் 2026-2027 கல்வியாண்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டம் மற்றும் கலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான பணிகளைத் தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இதற்காக, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சார்பில் பாட வல்லுநர்களைக் கொண்டு விவாதங்கள் நடத்தப்பட்டு, மாநிலப் பாடத்திட்டத்தைச் சர்வதேச தரம் மற்றும் பிற மாநில வாரியங்களின் பாடத்திட்டங்களுடன் ஒப்பீடு செய்யும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக, மேம்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டங்களை ஆய்வு செய்து இறுதி செய்வதற்கான சிறப்புப் பணிமனைகள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இம்மாதம் நடைபெற உள்ளன. முதல் கட்டமாக மே 11ம் தேதி முதல் மே 15ம் தேதி வரையிலும், இரண்டாம் கட்டமாக மே 18 முதல் மே 22ம் தேதி வரையிலும் இந்தப் பணிமனைகள் நடைபெற உள்ளன.

இதில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரி விரிவுரையாளர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த அரசுப் பள்ளி முதுகலை ஆசிரியர்கள் என 100க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் பங்கேற்கின்றனர். கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், கணினி அறிவியல், பொருளியல், வணிகவியல் மற்றும் அரசியல் அறிவியல் உள்ளிட்ட அனைத்து முக்கியப் பாடங்களுக்கும் தனித் தனி குழுக்கள் அமைக்கப்பட்டுப் புதிய பாடப்பகுதிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளது.

### சென்னை ரயில்வே கோட்டம்

# சரக்குப் போக்குவரத்து மூலமாக ரூ.1,289 கோடி வருவாய் ஈட்டி சாதனை!

சென்னை, மே. 5-

சென்னை ரயில்வே கோட்டம் கடந்த நிதியாண்டில் (2025-26) சரக்குப் போக்குவரத்து மூலமாக ரூ.1,289 கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

தெற்கு ரயில்வேயில் 6 கோட்டங்களின் ஒன்றான சென்னை கோட்டம் கடந்த நிதியாண்டில் (2025 26) சரக்குப் போக்குவரத்து செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது.

கடந்த நிதியாண்டில் மொத்தம் ரூ.1,289.78 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இதுதவிர பல புதிய சரக்குப் போக்குவரத்து சேவைகளையும் அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்த நிதியாண்டில் சென்னை ஜவஹர் டாக் துறை முகத்திலிருந்து பொன்மலை (கோல்டன் ராக் பாய்லர் பிளான்ட்) பகுதிக்கு முதன்முறையாக இரும்புக் குழாய்கள் கொண்டு செல்லப்பட்டன.

இது சென்னை கோட்டத்தின் சரக்குப் போக்குவரத்து பட்டியலில் ஒரு முக்கியச் சேர்க்கையாக அமைந்துள்ளது. சுற்றுச்சூழலுக்கு உகந்த சரக்கு போக்குவரத்தை ஊக்குவிக்கும் நோக்கில், மின்சார ஆட்டோக்களின் சரக்குப் போக்கு வரத்தை சென்னை கோட்டம் தொடங்கியது.

'மான்ட்ரா எலக்ட்ரிக்' ஆட்டோக்கள் தடாவில் இருந்து ரங்காபானிக்கும், 'மஹிந்திரா எலக்ட்ரிக்' ஆட்டோக்கள் ஜோலார்பேட்டையில் இருந்து வடகிழக்கு எல்லை ரயில்வேயின் (NFR) கீழ் உள்ள சால்சாப்ரா மற்றும் ஜிரானியா நிலையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

சரக்குப் போக்குவரத்து உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக, பொன்னேரி அருகே உள்ள அனுப்பம்பட்டு கிராமத்தில் சென்னை கோட்டத்தின் இரண்டாவது 'கதி சக்தி மல்டி மாடல் சரக்கு முனையம்' பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த முனையத்திலிருந்து, 45 பி.எல்.சி.ஏ. வேகன்கள் கொண்ட முதல் சரக்கு ரயில் பொன்னேரியிலிருந்து தென்கிழக்கு ரயில்வேயின் சக்ரதர்பூர் கோட்டத்தில் உள்ள மகாவீர் ஃபெரோ அலாய்ஸ் நிறுவனத்தின் தனியார் சரக்கு முனையத்துக்கு 1,389 கி.மீ தூரத்தைக் கடந்து சென்றது.

இவை அனைத்தும் சரக்கு போக்குவரத்துத் திறனை மேம்படுத்தும் நோக்கில் செய்யப்பட்டுள்ளன. இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கென்யாவில் கனமழை, நிலச்சரிவு: 18 பேர் உயிரிழப்பு!

நைரோபி, மே 5–

கென்யாவின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

கென்யாவின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் அமைந்துள்ள தாராகா நிதி, எல்கேயோமராக்வெட் மற்றும் கியாம்பு ஆகிய மாவட்டங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியான நிலச்சரிவுகள் பல குடும்பங்களை பாதித்துள்ளதுடன், ஏராளமானோர் தங்களது வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். மேலும், பொதுக் கட்டமைப்பு வசதிகளும் சொத்துக்களும் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எத்தனை பேர் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறித்த துல்லியமான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

கென்யாவின் தலைநகரான நைரோபியில் சாலைகள் அனைத்தும் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன. வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் வெள்ளத்தில் தத்தளிக்கும் காட்சிகள் அந்நாட்டு ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இதற்கிடையில், மழையினால் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும், இது தங்களது வணிகத்தைப் பாதிப்பதாகவும் கூறி மாகோங்கனி மற்றும் ருவாய் பகுதிகளில் உள்ள வியாபாரிகள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கனமழையினால் நீர் மூலம் பரவும் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், நாடு முழுவதும் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்கள் சேதமடையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் ஏற்கனவே எச்சரித்துள்ளது.

# இந்தியாவில் 5,432 மையங்களில் கடும் கெடுபிடிகளுக்கு மத்தியில் நீட் தேர்வு!

## 22.79 லட்சம் மாணவர்கள் எழுதினர்!

சென்னை, மே 5-

இந்தியாவில் 5,432 மையங்களில் கடும் கெடுபிடிகளுக்கு மத்தியில் நீட் தேர்வு நடைபெற்றது. 22.79 லட்சம் மாணவர்கள் எழுதினர். அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்புக்கான அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவை நீட் தேர்வு மூலம் நிரப்பப்படுகின்றன. இதனால் நீட் தேர்வை தேசிய தேர்வு முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இந்தக் கல்வியாண்டுக்கான நீட் யுஜி 2026 தேர்வு நாடு முழுவதும் நேற்று அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்று முடிந்தது. தேசிய அளவில் 552 நகரங்களிலும், வெளிநாட்டில் 14 நகரங்களிலும் சேர்த்து 5,432 தேர்வு மையங்களில் தேர்வு நடைபெற்றது. இந்தத் தேர்வை நாடு முழுவதும் 22,79,743 மாணவமாணவிகள் எழுதினர். தமிழகம் முழுவதும் 2 லட்சம் மாணவர்கள் எழுதினர். சென்னையில் மட்டும் 43 தேர்வு மையங்களில் தேர்வு நடைபெற்றது. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதினர். நீட் தேர்வில் குளறுபடிகள், மோசடிகள் நடைபெறாமல் இருக்க பல்வேறு கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாணவிகளுக்கு பெண் போலீசார், மாணவர்களுக்கு ஆண் போலீசார் மூலம் தீவிர சோதனை நடைபெற்றது. டிடெக்டர்கள் பயன்படுத்தப்பட்டன. கை, கால், தலைமுடி, காது, பாக்கெட்டுகள் உள்ளிட்ட அனைத்தும் பரிசோதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். மேலும் பயோமெட்ரிக் சரிபார்ப்பு, சிசிடிவி கண்காணிப்பு, பிரிண்டர்/கேமரா தடை போன்றவை கடுமையாக அமல்படுத்தப்பட்டன. ஆள்மாறாட்டத்தைத் தடுக்கும் விதமாக, நீட் தேர்வு நடைபெறும் மே 3 மற்றும் அதற்கு முந்தைய நாளான மே 2 ஆகிய இரு நாட்களும் எம்பிபிஎஸ் மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டாம். அத்தியாவசிய காரணங்கள் இருந்தால் மட்டும் விலக்கு அளிக்கலாம் என்று தேசிய மருத்துவ ஆணையம் மருத்துவக் கல்லூரி நிர்வாகங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருந்தது. அதன்படி, மருத்துவ மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படவில்லை. தேர்வு எழுத வந்த மாணவமாணவிகள் காலை 11 மணி முதல் மதியம் 1.30 மணி வரை தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர்.

தேர்வு மாலை 2 மணி முதல் 5 மணி வரை (3 மணி நேரம்) நடைபெற்றது. தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் தேர்வு நடைபெற்றது. இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களில் இருந்து 180 கேள்விகள் (ஒவ்வொன்றும் 4 மதிப்பெண்கள்) கேட்கப்பட்டன. மொத்தம் 720 மதிப்பெண்கள். ஒரு தவறான பதிலுக்கு 1 மதிப்பெண் குறைக்கப்படும். தேர்வு சரியாக 2 மணிக்கு தொடங்கி 5 மணிக்கு முடிவடைந்தது. தேர்வு எழுதி வெளியில் வந்த மாணவர்கள் உயிரியல் பிரிவு எளிதாக இருந்ததாகவும், வேதியியல் சராசரியாகவும், இயற்பியல் சற்று கடினமாகவும் இருந்ததாக தெரிவித்தனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒட்டுமொத்தமாக சற்று எளிதாக இருந்ததாகவும் அவர்கள் கூறினர். நீட் தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் (ஜூன் 2026) வெளியிட தேசிய தேர்வு முகமை திட்டமிட்டுள்ளது. அதன்பின் கவுன்சிலிங் செயல்முறை தொடங்கும்.

### 30 நாளில் அனைத்துப் பிரச்சினைக்கும் தீர்வு!

# ஈரானின் புதிய போர் நிறுத்த திட்டம்!

## அமெரிக்க அதிபர் டிரம்ப் பரிசீலனை!

வெஸ்ட் பாம் பீச், மே 5-

அமெரிக்கா ஈரான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதில் கடும் இழுபறி நிலை நிலவி வருகிறது. ஈரானின் முந்தைய திட்டத்தை அதிபர் டிரம்ப் நிராகரித்த நிலையில், புதிதாக 14 அம்ச திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை பாகிஸ்தான் மூலமாக அமெரிக்காவுக்கு ஈரான் அனுப்பி வைத்துள்ளது. இந்த புதிய திட்டம் அமெரிக்காவின் 9 அம்ச திட்டத்திற்கு பதிலளிக்கும் விதமாக இருப்பதாக ஈரானின் தஸ்னிம், பார்ஸ் ஆகிய செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா 2 மாத கால போர்நிறுத்தத்தைக் கோரியதாகவும், ஆனால் ஈரானியர்கள் போர்நிறுத்தத்தை நீட்டிப்பதற்குப் பதிலாக, போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் கவனம் செலுத்த விரும்புவதாகவும் 14 அம்ச திட்டம் குறித்து ஈரான் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இந்த புதிய திட்டத்தில், அனைத்துப் பிரச்னைகளும் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று ஈரான் விரும்புவதாகவும் கூறப்பட்டுள்ளது.

எதிர்கால தாக்குதல்களுக்கு எதிரான உத்தரவாதங்கள், ஈரானை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுதல், முடக்கப்பட்ட ஈரானிய சொத்துக்களை விடுவித்தல் மற்றும் தடைகளை நீக்குதல், போர் இழப்பீடுகள், லெபனான் உட்பட அனைத்துப் போர் நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல், மற்றும் ஹார்முஸ் ஜலசந்திக்கான புதிய செயல்முறை ஆகியவற்றை இந்தத் திட்டம் கொண்டுள்ளது.

30 நாட்களில் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டவுடன், அணுசக்தி திட்டம் குறித்த தனி ஒப்பந்தத்தை எட்ட மேலும் ஒரு மாத காலம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என கூறப்பட்டுள்ளது. ஈரானின் புதிய 14 அம்ச திட்டம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப், வெஸ்ட் பாம் பீச்சில் இருந்து மியாமி செல்வதற்காக ஏர்போர்ஸ் ஒன் விமானத்தில் ஏறும் முன்பாக அளித்த பேட்டியில், "இதுபற்றி நான் பின்னர் தெரிவிக்கிறேன்.

புதிய திட்டம் குறித்து விமானத்தில் ஆய்வு செய்வேன்" என்றார். பின்னர் சிறிது நேரத்தில் தனது சமூக ஊடக பதிவில் டிரம்ப், "கடந்த 47 ஆண்டுகளாக மனித குலத்திற்கும், உலகிற்கும் ஈரான் செய்த கொடுமைகளுக்கு இன்னும் போதுமான விலையை கொடுக்காத நிலையில், இந்த திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை" என குறிப்பிட்டிருந்தார். எனவே ஈரானின் புதிய திட்டமும் அதிபர் டிரம்பை கவரவில்லை என கருதப்படுகிறது.

**ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தது இந்திய கப்பல்!**

ஹார்முஸ் ஜலசந்தியில் ஒருபக்கம் ஈரானும் மறுபுறம் அமெரிக்காவும் முற்றுகையிட்டுள்ள நிலையில், 45,000 டன் எல்பிஜி எரிவாயுவுடன் இந்திய கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மார்ஷல் தீவுகள் கொடியை ஏந்திய சர்வ சக்தி என்ற கப்பல் ஈரானின் லாரக் மற்றும் கெஷ்ம் தீவுகளைக் கடந்து ஓமன் வளைகுடாவிற்குள் நுழைந்துள்ளது. அமெரிக்காவின் முற்றுகைக்குப் பிறகு ஹார்முஸ் ஜலசந்தியை கடந்திருக்கும் முதல் இந்திய கப்பல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்:

# பூவிருந்தவல்லி - வடபழனி வழித்தடத்தில் விரைவில் ரயில் சேவை!

சென்னை, மே 5-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் மெட்ரோ ரயில் சேவை, பூந்தமல்லி வடபழனி தடத்தில் விரைவில் தொடங்கவுள்ளது. சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பிறகு அமையும் புதிய அரசு, ரயில் சேவையை தொடங்கி வைக்கும் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 116.1 கி.மீ தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரையிலான 4வது வழித்தடம் (26.1 கி.மீ) ஒன்றாகும்.

இத்தடத்தில் ஒரு பகுதியாக, பூந்தமல்லி புறவழிச் சாலை நிலையம் வடபழனி வரை 14.64 கி.மீ. தொலைவுக்கு உயர்மட்டபாதை அமைக்கப்பட்டுள்ளது. இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் கடந்த பிப்ரவரியில் ஆய்வு மேற்கொண்டனர்.

ரயில்வே தண்டவாளத்தின் தரம், மெட்ரோ ரயில் நிலையம், பிரேக்கிங் தொழில்நுட்பம், பயணிகள் பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு செய்தனர். இதுதவிர, அதிவேக சோதனை ஓட்டம் மேற்கொண்டனர்.

இதன்முடிவில், பூந்தமல்லி முதல் வடபழனி வரை வழித்தடத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் ஒப்புதல் அளித்தார்.

அதேநேரத்தில், பூந்தமல்லி போரூர் வரை 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்களை இயக்கவும், போரூர் சந்திப்பு முதல் வடபழனி தடத்தில் ஒவ்வொரு திசையிலும் ஒரு நேரத்தில் 25 கி.மீ. வேகத்தில் இயக்கவும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, மார்ச் மாதம் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மார்ச் 15ம் தேதி தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால், மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படாத நிலை உருவானது.

தற்போது சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று (மே 4) நடைபெறவுள்ளது. இதையடுத்து இன்னும் ஒரு வார காலத்தில் புதிய அரசு பதவியேற்கவுள்ளது.

இந்நிலையில், பூந்தமல்லி முதல் வடபழனி வரையில் மெட்ரோ ரயில் சேவை விரைவில் தொடங்கவுள்ளது. ரயில் சேவை தொடங்கும்போது, பூந்தமல்லி போரூர் வரை அனைத்து நிலையங்களில் நின்று செல்லும்.

போரூர் முதல் வடபழனி வரை இடையில் உள்ள நிலையங்களில் நிறுத்தப்படாது. பூந்தமல்லி முதல் வடபழனி வரை ரயில் இயக்கப்படவுள்ளதால், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் பயணிகள் இறங்கி, சென்ட்ரல் பரங்கிமலை (பச்சை நிற வழித்தடம்) வழித்தடத்தில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் ஏறி, விரும்பிய இடத்துக்கு பயணிக்க இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி வடபழனி வரை மெட்ரோ ரயில் சேவை தொடங்க தயாராக உள்ளது.

புதிய அரசு அமைந்தவுடன், இத்தடத்தில் ரயில் சேவையை தொடங்கி வைக்கும். இத்தடத்தில் முக்கிய நிலையங்களான போரூர், வடபழனி ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்கள் தயாராக இருக்கின்றன.

போரூர் வடபழனி தடத்தில் ஆலப்பாக்கம், வளரசவாக்கம் போன்ற மெட்ரோ ரயில் நிலையங்களில் இறுதிக்கட்ட பணிகள் நடைபெறுகின்றன. இது போல, இத்தடத்தில் மற்ற ரயில் நிலையங்களில் கட்டுமானப்பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இந்த நிலையங்களில் கட்டுமானப்பணிகளை முடித்து, படிப்படியாக பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தெற்கு ஒன்றியம் பீரகுப்பம் பழங்குடியினர் வாழ் பகுதியில் ஏற்கனவே குடிநீர்,சாலை,மின்சாரம் உள்ளிட்ட வசதிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், ஏற்படுத்திக் கொடுத்த நிலையில் தற்போது ROTARY CLUB மற்றும் AID INDIA தொண்டு நிறுவனம் இணைந்து பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்காக புதியதாக இல்லங்கள் கட்டிக் கொடுத்தனர். இக்கட்டிடங்களை அந்நிறுவனத்தாருடன் இணைந்து அவர் திறந்து வைத்தார். உடன் திருத்தணி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.இராஜேந்திரன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.